# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW3 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 03.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.மரியப்பா | Father Name | : | திரு.கரியப்பா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் கர்நாடக மாநிலம் ஆணைக்கல்லில் சிட ஒஸ்கொட்டா என்ற கிராமத்தில் வசிக்கிறேன். என் மனைவி பெயர் நாகரத்தினம்மாள் எனக்கு இரண்டு குழந்தைகள் , என் மனைவிக்கு உடன் பிறந்தவர்கள் எல்லப்பா மற்றும் சின்னம்மாள் ஆவார்கள். சின்னம்மாளின் மகன் பெயர் முருகேஷ். முருகேஷ் பொம்மனஹள்ளியில் குடியிருந்து வந்தார். வண்டி Water service செய்யும் வேலை செய்து வந்தார் . முருகேஷ் இறந்துபோய்விட்டார் எத்தனை வருடம் முன்பு இறந்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எப்படி இறந்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது . மத்திகிரி காவல் நிலையத்திற்கு போய் பாடியை பார்த்தேன் . எந்த காரணத்திற்காக அவர் இறந்துவிட்டார் என்பது தெரியாது. முருகேசன் பாடியை பார்க்கும்போது அவர் உடலில் எந்த எந்த இடத்தில் காயம் ஏற்பட்டியிருந்தது என்பதை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி , அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு வழக்கறிஞர் மேலும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-**

போலீஸ் விசாரணையில் கடந்த 12.02.2018 தேதி காலை முருகேஷ் ஓசூர் – ஆணைக்கல் போகும் இரயில் பாதையில் வெட்டுக்காயங்களுடன் இறந்துகிடப்பதாக தகவல் தெரிந்து காந்தி நகர் இரயில்வே பாதையிக்கு போய் முருகேஷ் உடலை பார்த்தபோது அவருக்கு கழுத்து , தலையின் பின் பகுதி, தோள்பட்டை , வலது கை கால் ஆகிய இடங்களில் வெட்டு காயம் இருந்தது என்றும் , கோபாலும் அவர்கள் கூட்டாளிகளும் சேர்ந்துக்கொண்டு கூர்மையான ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்து விட்டு அதனை மறைக்க பிரேதத்தை இரயில்வே பாதையில் போட்டுவிட்டு சென்றார்கள் என்றும், இது சம்மந்தமாக அவருடைய மனைவி ஆர்த்தி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் நான் பிரேத விசாரணையின் போது உடன் இருந்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் அது தவறு.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியாது என்று சொன்னால் சரிதான் . அன்றைய தினம் நான் போலீஸ் ஸ்டேசன் போய்விட்டு அப்படியே வந்துவிட்டேன் என்றால் சரிதான். போலீஸ் ஸ்டேசனுக்கு என்றைய தினம் போனேன் என்ற விவரம் தெரியாது.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN